Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No.146 /18

**Deposition of P.W.8**

| | | |
|---|---|---|
| Name | : | செல்வக்குமார் |
| Father's Name | : | செல்வராஜ் |
| Village | : | மன்னார்குடி |
| Religion | : | இந்து |
| Age | : | **50/2022** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 25.11.2022**

நான் மன்னார்குடியில் வசித்து வருகிறேன். மன்னார்குடி சாந்தி திரையரங்கு எதிரே கடந்த **15** வருடங்களாக அச்சகம் வைத்து நடத்தி வருகிறேன். எனது அச்சகத்தில் திருமண அழைப்பிதழ்கள், நோட்டீஸ், பில்புக் ஆகியன அச்சிட்டு தருவோம். நாங்கள் அடிக்கும் பத்திரிக்கை மற்றும் நோட்டிஸ்களில் எங்களது அச்சகத்தின் பெயர் மற்றும் தொலைபேசி எண்ணை அச்சிடுவோம். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.**2** திருமண அழைப்பிதழ் எனது அச்சகத்தில் அச்சிடப்பட்டதுதான். **2016** நவம்பர் மாதம் புண்ணியமூர்த்தி என்பவர் எனது அச்சகத்திற்கு வந்து அ.சா.ஆ.**2** திருமண அழைப்பிதழை அச்சிட்டு தருமாறு கேட்டார். இதுசம்மந்தமாக **07.03.2018** அன்று காவல்துறையினர் எனது அச்சகத்திற்கு வந்து அ.சா.ஆ.**2** திருமண அழைப்பிதழை காண்பித்து எனது அச்சகத்தில் அச்சிடப்பட்டதா என்று விசாரித்தனர். நானும் எனது அச்சகத்தில்தான் அச்சிடப்பட்டுள்ளது என்ற விபரத்தினை கூறினேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

எதிரி புண்ணியமூர்த்தி எனது அச்சகத்தை அணுகி திருமண அழைப்பிதழ் அடித்து தருமாறு கேட்டார் என்ற விபரத்தை போலீசார் விசாரணையின்போது சொல்லியுள்ளேன். எனது அச்சகத்தில் அடித்து கொடுக்கப்படும் அழைப்பிதழ்கள் மற்றும் நோட்டிஸ்கள் போன்றவற்றினை யார் அச்சிடக்கொடுத்தார்கள், எத்தனை அழைப்பிதழ்கள் அச்சிடவேண்டும் அதன் விலை மற்றும் முன்பணம் ஆகியவற்றினை ஆர்டர்பாமில் நிரப்பி கொள்வது வழக்கம். என்னை போலீசார் விசாரிக்கும்போது அ.சா.ஆ.2 திருமண அழைப்பிதழுக்கான ஆர்டர்பாமினை அளித்தேன் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் புண்ணியமூர்த்தி எனது அச்சகத்தினை அணுகவில்லை என்றும் நான் திருமண அழைப்பிதழ்கள் அச்சிட்டு கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**ம.வி.இல்லை**